**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 20.03.2025.**
**C.C. 356/2022**

**Accused absent, petition filed and allowed. Both side counsels present.**

அ.சா. 2 திரு. முருகன் அவர்கள் முன்னிலையாகி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

போலீசார் விசாரணையில் என் மனைவி ஓட்டலுக்கு வரவில்லை என்று கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்னது போல பால்பாண்டியும், நாகராஜும் சக்கிலிய குதிமகனே என்று சொல்லி பால்பாண்டி பிடித்துக் கொள்ள நாகராஜ் என்னை கட்டையால் இடுப்பு, நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் இல்லை. பால்பாண்டியை நான் அடித்ததாக என் மீது ஒரு வழக்கு இருக்கிறது என்றால் சரிதான், ஆனால் நான் அடிக்கவில்லை. நான் பால்பாண்டியை அடிக்கும் போது நானும், என் மகனும் கீழே விழுந்ததால் எங்களுக்கு காயம் ஏற்பட்டதனாலும், ஏற்கனவே பால்பாண்டி எங்கள் மீது ஒரு வழக்கு கொடுத்து இருப்பதாலும், அதில் இருந்து தப்பிப்பதற்காக, எனக்கு ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி அவர்கள் மீது இந்த வழக்கை உண்மைக்கு மாறாக கொடுத்து, அதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.20 17:21:40 +0530